நாவிதன்வெளி பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுகள்

---

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாவிதன்வெளி பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுகளின் மீதானகருத்துரைகள்

---

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

---

2013 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 03/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு தெடக்கம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் முதல் நான்கு நியமங்களைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 11,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சாரக் கட்டணம், மற்றும் தொலைபேசிக் கட்டணம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 6,388 கூட்டுமொத்த தொகைக்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறப்படவேண்டியவைகள் மற்றும் செலுத்தவேண்டியவைகள்

2012 ஆம் ஆண்டில் அலுவலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தரினதும், ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தரினதும் கடன் நிலுவை ரூபா 42,689 தொகையை அறவிடுவதற்கு 2014 யூன் 19 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழேதரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டதின் 158ஆம் பிரிவு | சேகரிப்பாளருக்கு அல்லது அலுவலருக்கு ஆதனவரி செலுத்தப்படாததற்கு செயலாளரினால் ஒப்பமிடப்பட்ட எழுத்தாணையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | காசு மற்றும் களஞ்சியப் பொருட்கள் நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்படவில்லை. |

2 நிதிமீளாய்வு

2.1 நிதிவிளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையான வருமானம் ரூபா 1,172,876 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையான வருமானம் ரூபா 1,719,777 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 546,901 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 முத்திரைக் கட்டணங்கள்

2013 ஆம் ஆண்டுக்கான கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணத் தொகையினை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து 2014 யூன் 19 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.2 ஏனைய வருமானம்

(அ) தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 02 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காகவும் மீளாய்வாண்டிற்காக அறவிடவேண்டிய அண்ணளவாக ரூபா 40,000 தொகையான கட்டணத்தை சபை அறவிடவில்லை.

(ஆ) 2006 முதல் 2012 ஆம் ஆண்டுவரையான காலத்திற்கான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை ரூபா 2,543,081 தொகையை அறவிடுவதற்கு 2014 யூன் 19 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

3.1 உள்ளகக் கணக்காய்வு

ஓவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கிகொள்ளவேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமானச்சேகரிப்பு